தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 8-3-2019

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**பயிர்களைத் தாக்கும் சிலந்திகளைக் கண்டறிதல் மற்றும் மேலாண்மை - மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம்**

இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம், புதுதில்லி மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், பூச்சியியல் துறை, கோயம்புத்தூர் இணைந்து மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பயிர்களைத் தாக்கும் சிலந்திகளைக் கண்டறிதல் மற்றும் மேலாண்மை பற்றிய ஒரு நாள் பயிற்சி கோயம்புத்தூர் மாவட்டம் சர்க்கார் போரத்தி கிராமத்தில் மலைவாழ் உழவர்களுக்கு நேற்று (07.03.2019) நடத்தப்பட்டது.

இப்பயிற்சியில் முனைவர். இரா.விஷ்ணுபிரியா, பேராசிரியர் (பூச்சியியல் துறை) அவர்கள் வரவேற்புரை நல்கியும் மற்றும் பயிர்களைத் தாக்கும் சிலந்தி பூச்சிகளின் வகைகள் குறித்தும் உரையாற்றினார். முனைவர். நா. முத்துக்கிருஷ்ணன், பேராசிரியர் மற்றும் தலைவர், பூச்சியியல் துறை அவர்கள் மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம் பற்றியும் சிலந்தி பூச்சிகளின் முக்கியத்துவம் குறித்தும் உரையாற்றினார்.

முனைவர். கு. பிரபாகர், இயக்குநர், பயிர் பாதுகாப்பு மையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் அவர்கள் பயிற்சியைத் தலைமையேற்றும், காய்கறி பயிர்களைத் தாக்கும் சிலந்திகள் மற்றும் கட்டுப்பாடு பற்றிய மடிப்பிதழ் வெளியிட்டும் மற்றும் மலைவாழ் மக்களுக்கு முக்கிய இடுபொருட்களையும் வழங்கினார். முனைவர். எ.சுமதி, உதவிப் பேராசிரியர் (பூச்சியியல் துறை) ஒருங்கிணைந்த பயிர் சிலந்திகள் மேலாண்மை குறித்து உரையாற்றி நன்றியுரை வழங்கினார்.

மேலும் சிலந்தி பூச்சிகளின் வகைகளை கண்டறிதல் மற்றும் சிலந்தி பூச்சிகளின் எண்ணிக்கை மற்றும் சேதாரத்தை கணக்கிடுதல் பற்றிய செயல் விளக்கங்கள் செய்து காண்பிக்கப்பட்டன. இப்பயிற்சியில் **25** மலைவாழ் உழவர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

மக்கள் தொடர்பு அலுவலர்